செ. கு. எண்: 079 நாள்: 29.05.2018

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் அறிக்கை – 29.5.2018**

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், கச்சநத்தம் கிராமத்தில் 25.5.2018 அன்று நடைபெற்ற கோவில் திருவிழாவிற்கு பிறகு, இரு சமூகத்தினரிடையே ஏற்பட்ட பிரச்சனையில், திரு. சண்முகநாதன் மற்றும் திரு.ஆறுமுகம் ஆகிய இருவரும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. சண்முகநாதன் மற்றும் திரு. ஆறுமுகம் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சம்பவத்தில் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நபர்களுக்கு உயரிய சிகிச்சை அளிக்க மதுரை மாவட்ட ஆட்சித்தலைவருக்கும், மருத்துவமனை அதிகாரிகளுக்கும் நான் உத்தரவிட்டுளேன். இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற எனது விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சம்பவத்தினையடுத்து, மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் உடனடியாக செய்து தருமாறும்,

இந்தச் சம்பவத்திற்கு காரணமானவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படியும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 8.25 லட்சம் ரூபாய் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையிலிருந்தும், 1.75 லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்தும், ஆக மொத்தம் 10 லட்சம் ரூபாயும்; காயமடைந்தவர்களுக்கு 1 லட்சம் ரூபாய் ஆதிதிராவிடர் நலத் துறையிலிருந்தும், 50,000 ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்தும் ஆக மொத்தம் 1.50 லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**